T-UN-387

ஆதி குமார வயலூர்

# ஸ்தல புராணம்



— குளமும்

த்தம்)

தேவஸ்தான வெளியீடு



உத்ஸவர்

ஓம் :

ஸ்ரீ சுப்ரமணியசுவாமி துணை

## ஆதி வயலூர்

# ஸ்தல புராணம்

இயற்றியவர் :

வித்வான் : வி. துரைசாமி,

தமிழாசிரியர்,

E. R. உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

★

தேவஸ்தான வெளியீடு

விலை 12 அணா

உ

# முகவுரை

---

ஆதி குமார வயலூர் ஸ்தல விளக்கம் என்னும் இந்நூல் பக்த கோடிகளுக்கு ஆதி குமார வயலூரைப் பற்றியும், கோவில்களைப் பற்றியும், ஸ்தல விசேஷம் பற்றியும் தெரியவேண்டிய விஷயங்களை வெளியிடுகின்றது. தமிழில் இவ்விளக்கத்தை எழுதித்தந்த வித்வான் உயர் திரு. **வி. துரைசாமி** (தமிழாசிரியர்) அவர்களுக்கு எந்நன்றி உரித்தாகுக.

ஆதி குமார வயலூர்,
1—1—54.

**M. R. ஸ்ரீனிவாஸன்,**
நிர்வாக அதிகாரி.

# நூன்முகம்

மூவர் தேவாதிகள் தம்பிரானாகிய முழு முதற்கடவுள் முருகவேள் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் முதன்மையானது **வயலூர்.**

அவருடைய நூல்களுள் தனிச்சிறப்புடைய திருப்புகழ் அங்குதான் விளைந்தது.

அருணகிரிநாதர் திருவருணையில் திருவேலிறைவன் திருவருள்பெற்று 'முத்தைத்தரு' என்று அறுமுக வள்ளல் அடியெடுத்துத்தர, அப்பாடலைப்பாடி மீண்டும் நிருவிகற்ப சமாதியில் அமர்ந்தனர்.

அருணகிரிநாதரை ஆறுமுகக் கடவுள் "வயலூருக்குவா" என்று கட்டளையிட்டனர். அருணகிரிநாதர் வயலூரையடைந்து, ஆங்கு முருகவேள் வேலினால் உண்டாக்கிய

சக்தி தீர்த்தத்தில் முழுகி, திருக்கோயிலுட் சென்றார். முருகவேள் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களுமாகக் காட்சியளித்து, "திருப்புகழை உலகம் உய்யப்பாடுதி" என்று பணித்தருளினார்.

அருணகிரிநாதர் "ஐயனே! பாடுகின்ற வன்மையை அருணையில் அளித்தீர். அதை எவ்வாறு பாடவேண்டும் என்ற தன்மையை அருளவேண்டும்". என்று வேண்டினார். கருணை நிறைந்த தமிழ்க் கடவுள், "மயில் வாகனத்தையும், கடப்ப மலர் மாலையையும், வடிவேலாயுதத்தையும், சேவற்கொடியையும், திருவடியையும், பன்னிரு புயங்களையும், இந்த வயலூரையும் வைத்துப்பாடுக" என்று திருவருள் புரிந்தனர்.

அருணகிரிநாதர், அறுமுக வள்ளலின் அருகே எழுந்தருளியுள்ள பொய்யாக் கணபதியின் திருமுன்வந்து, "கைத்தல நிறை கனி" என்ற திருப்புகழைப்பாடிய பின், தனக்கு இறைவர் செய்த திருவருளை மறவேன் என்று பாடி, அதுமுதல் எண்

ணிறந்த திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி மகிழ்வாராயினர்.

"பக்கரை விசித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீப
பக்குவமலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதுமதிக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும்வைத்துயர் திருப்புகழ்விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே

என்ற திருப்புகழால் இக்கருத்து நன்கு தெளிவடைகின்றது.

எனவே, அருணகிரிநாதருக்கு சிறப்பான திருவருள் கிடைத்த இடம் வயலூர். அங்கு அவர் பலநாள் தங்கியிருந்தனர். அவர் எங்கு சென்று எம்பிரானைப் பாடினாலும், "வயலூரா" "வயலூரா" என்று வயலூர் முருகனை மறவாது பாடுகின்றனர்.

வயலூரில் முருகன் தனக்கு அருளிய திறத்தை அருணகிரியார் பெரூர் திருப்புகழிலே கூறியிருக்கின்றனர்.

" வயலிநகரியி லருள்பெற மயிர்மிசை
உதவுபரிமள மதுகர வெகுவித
வனசமலரடி கனவிது நனவிது மறவேனே"

அத்தகைய அற்புதமான திருத்தலம் வயலூர். இது திருவருளின் கருவூலமாக விளங்குகின்றது. இத்தகைய தலத்திற்கு நிர்வாக டிரஸ்டியாகிய எனது அன்பர், உயர் திரு. **மா. தில்லைநாயகம் பிள்ளை** யவர்கள், இவ்வயலூரைப்பற்றி அனைவரும் அறிந்து உய்யும்பொருட்டு, புலவர் திரு. **வ. துரைசாமி** அவர்களைக்கொண்டு, ஒரு அழகிய வரலாற்று நூல் எழுதுவித்து வெளியிட்டனர். இது மிகவும் இன்றியமையாதது. அன்பர் தமிழாசிரியர், துரைசாமி யவர்கள் நன்ருகவும், தெளிவாகவும் எழுதியிருப்பது பாராட்டற்குரியது.

இதனை எல்லோரும் படித்துப் பயனடைவார்களாக. வயலூர் வள்ளலின் வற்ருத கருணை துணைபுரிக.

அன்பன்,

கிருபானந்தவாரி

உ

ஓம் :

ஸ்ரீ குமரேசன் துணை.

# ஆதிவயலூர் ஸ்தல புராணம்

## 1. இயற்கையும், முருகனும்

தமிழ்மொழியில் பூமியின் அமைப்பு ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் இந்த ஐவகை நிலத்திற்கும் தனித் தனியே தெய்வங்களும் மற்ற இயற்கைப் பொருள்களும் இன்னின்னவை எனவும், ஆங்காங்கு நிகழும் ஒழுக்கங்களும் இத் தன்மையன என்றும் திறம்பட வகுத்திருக் கின்றனர். இந்த அமைப்புமுறை நம் தமிழ் மொழியைத் தவிர, வேறு மொழிகளிற் காணப்படவில்லை.

மலைப்பிரதேசமே குறிஞ்சி நிலமாகும். காடும் அதைச்சேர்ந்த இடமும் முல்லை நிலம் என்பர். வயல் பிரதேசம் மருத

நிலமாகும். கடலூர், கடல்சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். மலேயும் காடும் தன் உருவம் திரிந்து வற்றிப்போய் வெறும் பொட்டல் நிலமாகும்போது பாலே என்னும் பெயரை அடைகின்றது.

“ முல்லேயும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துப்
பாலே என்பதோர் படிவங்கொள்ளும் ”

என்பது சிலப்பதிகாரம்.

இந்த நிலங்களே நேரில் காணும்போதும் நூல்களிற் படிக்கும்போதும் அவை ஒவ்வொன்றிற்கும் உள்ள வெவ்வேருன அழகைக்கண்டு ஆச்சரியமும் களிப்பும் அடைகிருேம். குறிஞ்சி நிலமாகிய மலேப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அதன் அழகுக்கு இணேயே இல்லே. அடர்ந்த புதர்களும், பருத்து உயர்ந்த மரங்களும், கணக்கற்ற உயிர் வகைகளும் நிறைந்த மலேகள் இயற்கைத்தேவியின் உல்லாச மண்டபங்கள் அல்லவா? இப்படிப்பட்ட மலேகளும் அவற்றைச்சார்ந்த இடங்களுமே முருகப் பெருமான் வசிக்கும் இடங்களாகும். நாலா

யிரம் வருஷங்களுக்கு முன் தோன்றிய தொல்காப்பியம் என்ற தமிழ் நூலிலே.

"சேயோன் மேய மைவரை யுலகமும்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, 'இளமையோனுகிய முருகன் தங்கி வசிக்கின்ற கருமை நிறம் பொருந்திய மலைப் பிரதேசமும்' என்பது அதன் பொருள், மேலும் நக்கீரர் தாம் இயற்றிய திருமுருகாற்றுப்படையில்,

"விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ"

என்று முருகனை அழைக்கின்றார். 'ஆகாயத்தை அளாவிப் போர்செய்யும் நீண்ட மலைப்பிரதேசங்களாகிய குறிஞ்சிநிலத்திற்கு உரிமை வாய்ந்தவனே' என்பது இதன் கருத்து. இவைபோன்ற உதாரணங்களால் முருகன் விரும்பி வாசம்செய்வது இயற்கையின் வாசஸ்தலமாகிய மலைப்பிரதேசமே என்பது விளங்கும்.

முருகனது படைவீடுகள் ஆறில் 'குன்றுதோருடல்' என்பது ஒன்று.

"குன்றுதோ ருடலும் நின்றதன் பண்பே"

என்று முழங்குகிறது திருமுருகாற்றுப் படை. எனவே குன்றுகள்தோறும் நின்று விளையாடும் பண்பையுடையவன் முருகன் என்பது விளங்கும்.

இவ்வாறு இயற்கை யழகுமிகுந்த குறிஞ்சி நிலத்தில் குமரன் அதிகப் பற்றுடையவன் ஆயினும், மருதநிலம்போன்ற மற்றநிலங்களை வெறுப்பவன் அல்ல. தமிழ் நாட்டில் சிறுபான்மை சமநிலத்திலும் முருகன் ஸ்தலங்கள் அமைந்துள்ளன. திருச்செந்தூர், ஆதிவயலூர் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். திருமுருகாற்றுப்படையில் குமரக்கடவுள் வசிக்கும் இடங்களாகச் சிலவற்றை நக்கீரர் குறிப்பிடுகின்றார். அதாவது,

“ காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் ”

என்ற அடிகளேயாகும். குறிஞ்சியைத் தவிர, காடு, சோலை, குளம், ஆறு, சந்தி, சதுக்கம் முதலியனவும் அவனது உறைவிடங்கள் என்பது விளங்குகின்றது.

எனவே இயற்கைக்குள் இயற்கையாகவும், அழகிற்குள் ஒளி விடும் அழகாகவும் இருக்கும் ஒப்பற்ற பொருள்தான் குமரதெய்வம் ஆகும். இதுபற்றியே ஆதிப்பழங்குடி மக்களாகிய தமிழர் இயற்கையை வழிபட்டு, அதன்மூலம் இயற்கை வடிவான இறைவனை அறிந்தனர்.

முருகன் என்றமைந்த திருப்பெயரும் இவ்வுண்மையை அறிவுறுத்தும். முருகு என்னும் சொல் அழகு என்னும் பொருள் தருவது. முருகு ஆகிய அழகையுடையவன் முருகன். அழகு திரண்டிருக்கும் இடங்கள், பொருள்கள் அனைத்தும் முருகனுடைய திருவுருவங்களேயாகும். அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் அவன் நீங்காது வசிக்கின்றான் என்ற உண்மையைத்தான் மேலே கூறிய திருமுருகாற்றுப் படையின் அடிகள் வலியுறுத்துகின்றன.

'கல்தோன்றி மண்தோன்றாத காலத்தே முன்தோன்றி மூத்தகுடி' ஆகிய தமிழ்க் குடியில் தோன்றிய மக்கள் அவ் வாதி காலத்திலேயே இயற்கை யழகை நன்கு

ரஸித்து அதன் மூலம் இறைவனைக் காணும் நல்லறிவு பெற்றனர். ஆதலின் அழகைக் கடவுளாகக் கண்டு போற்றுந் தன்மையில் முருகன் என்று பெயரிட்டு வழிபட்டு வந்தமையறிந்து மகிழக்கூடியது.

அழகு பூரணமாக நின்று ஆட்சிபுரிவது இளமைப் பருவத்திலேதான். நரம்பு எழுந்து, உடல் வற்றி, நரைத்த கூந்தலும், சுருங்கிய தோலும் உடைய முதுமையில் அழகு மறைந்துவிடுகின்றது. 'என்றும் பதினாறாக இரு' என்று வாழ்த்துவது நம் நாட்டு வழக்கம். அதன் கருத்து யாது? பதினாறாகிய வயது பூரணமான அழகைப் பெற்றுக் காண்பவர் மனத்தைக் கவர்ச்சி செய்வதாகும். எனவே நிகரற்ற அழகும், வலிமையும் அமைந்த பதினாறு வயதாகவே (மார்க்கண்டேயனைப்போல) இரு என்று பெரியோர்கள் ஆசீர்வதிக்கின்றார்கள். இவ்வுண்மையை விளக்கும் நிலையில் முருகன் என்றும் நீங்காத இளமையோனாக விளங்குகிறான். குமரன், குமார தெய்வம் முதலிய பெயர்கள் முருகனுக்கு அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.



ஸ்ரீ அருணகிரியார்

## 2. ஆதிவயலூரும், அருணகிரியும்

மலைகள்தோறும் வசிக்கும் மாண்புடைய முருகன், வயல்கள் சூழ்ந்த மருத நிலத்திலும் உறைகின்றான் என்பதற்கு ஆதிவயலூர் என்னும் இவ்வழகிய ஸ்தலம் சான்றாகும். சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் பச்சை நிறப் பட்டாடை விரித்தது போலவும், பச்சை மரகதத்தை உருக்கி ஊற்றியது போலவும் நெல் வயல்களாகக் காணப்படுகின்றன. அவற்றின் இடையிடையே ஓடும் நீரோடைகள், அப் பசும்பட்டாடையில் காணும் வெண்ணிறக் கோடுகள் போலவும், அல்லது மரகதப் பாளங்களின் இடையே காணும் வயிரக் கீற்றுக்கள் போலவும், பார்ப்பவர் மனதைப் பரவசப் படுத்துகின்றன. இப்படிப்பட்ட பசுமை பொங்கும் சூழ்நிலையின் நடுவே, கம்பீரமாக விளங்குகிறது ஆதிவயலூர்க் கோயில். கோயிலைச் சூழ்ந்துள்ள தென்னை மரங்கள், அன்பர்கள் சுற்றிலும் நின்று முருகனுக்குப் பசுங்குடைகள் பிடிப்பதைப் போலத் தோற்றமளிக்கின்றன!

மக்களுக்கு உயிரூட்டும் நீரும், நெல்லும் அளவுகடந்து சுரக்கும் இந்த மருதநிலத்தில், முருகன் ஜீவராசிகளுக்கு அருள் சுரந்து வேண்டியதைக்கொடுக்கும் வள்ளற் பெருமானுகக் காட்சி தருகிருன். வயல்கள் சூழ்ந்த இடத்தில் இந்த ஸ்தலம் அமைந்துள்ளதனுல் வயலூர் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இவ்வூர் திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருச்சித் தாலூகாவில் இருக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலிருந்து மேற்கே சுமார் ஆறு மைல் தூரத்தில் உள்ளது இவ்வூர். திருச்சிராப்பள்ளியிலிருந்து சோமரசம்பேட்டை வரையில் தினசரி பஸ் வசதியுண்டு. மேலும் பிரதி மாதாந்திர கிருத்திகைகளிலும் இதர உற்சவ காலங்களிலும் பொதுஜனங்களுக்கு சௌகர்யமாய் திருச்சியிலிருந்து வயலூருக்கு நேரிடையாகவே பஸ் வசதி உண்டு.

திருச்சிநகரப்பகுதிகளாகிய தென்னூரையும், புத்தூரையும் தாண்டியதும் மோட்டாரானது ஓர் பச்சைப் பசுங்கடலுக்குள்

நுழைந்து பாய்ந்து செல்வதைப்போலச் செந்நெல் வயல்களிடையில் விரைந்து செல்கிறது சிறிதுநேரத்தில் எதிரே அகன்ற பாறைமீது அழகிய கோயில் ஒன்று காணப்படுகிறது அதுதான் 'உய்யக்கொண்டான் மலை' என்ற கோயில். அக்கோயிலைச் சார்ந்த சிற்றூரையும் கடந்து செல்லுகிறோம். சில நிமிஷங்களில் சோமரசம் பேட்டையை அடைந்துவிடுகிறோம்.

சோமரசம்பேட்டையும் ஓர்சிற்றூர்தான். இப்போது மோட்டார் போக்குவரத்து ஏற்பட்டிருப்பதால் அவ்வூர் சிறு நகரம்போலக் காட்சியளிக்கின்றது சிற்சில கடைகள் கொண்ட வீதி வழியாக மேற்கு நோக்கிச் செல்லும் சாலையின் வழியே சென்றால் வயலூரை யடையலாம். அச்சாலையானது பெரும்பாலும் உய்யக்கொண்டான் சர்ப்ப நதியின் கரையிலேயே செல்கின்றது சற்று தூரம் சென்றவுடன் சாலையிலிருந்தபடியே வடக்கு முகமாகத் திரும்பிப்பார்த்தால் வயலூரின் கோபுரம் நம்மை வாவென்றழைப்பதைப்போல் கம்பீரமாக நிற்பதைக் காணலாம். உடனே நம் உள்ளத்

தில் தோன்றும் பக்தி மிகுதியினால் அக் கோபுரத்தை வணங்கி முருக பக்தியில் சூழ்ந்துவிடுகிறோம்.

" மனுநியாய சோணாடு
தலைமையாக வேமேலை
வயலிமீது வாழ்தேவர் பெருமானே "

என்ற அருணகிரியின் திருப்புகழ் நம்மை யறியாமல் நாவில் உதிக்கின்றது! சிறிது தூரத்தில் சாலையைவிட்டு வடக்குப்புற மாகக் கீழிறங்கி வயல்களினிடையே நடக்க ஆரம்பித்தால் அதோ வல்வினை தீர்த்தரு ளும் வள்ளி மணாளன் கோயில்!

இயற்கைக் குடில் என்று இவ்வூரைக் கூறினால் அது மிகையாகாது. பசுமைநிறம் இல்லாத இடத்தைப் பார்ப்பதே அரிது. கோயிலைச் சூழ்ந்து தென்னஞ்சோலைகளும், வயல்களும் நெருங்கியுள்ளன. இதை நேரிற் கண்டுதான் அருணகிரியார் தம் திருப் புகழில்,

" மடல்சீற் றினிலெழு
விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனில்
உறைவோனே "

என்று பாடியிருக்கின்றனர் போலும்! சோமரசம்பேட்டையிலிருந்து வயலூர் சுமார் ஒன்றரை மைல்கள் இருக்கலாம்.

வயலூருக்கு வழங்கும் வேறு பெயர்கள், குமாரவயலூர், ஆதிவயலூர், வன்னிவயலூர், மேலைவயலூர், அக்னீஸ்வரம், அங்கிபூஜிதவயலூர் என்பன. அருணகிரியார் இவ்வூரை வயலி, வயற்பதி, மேலைவயலி, செய்ப்பதி, வயலிநகர் என்னும் பெயர்களால் அழைக்கின்றார்.

இவ்வூரின் கிழக்கெல்லையாகக் கீழவயலூர் உள்ளது. தெற்கெல்லை அதவத்தூர் என்பது. மேற்கே கொத்தட்டை என்னும் ஊரும், வடக்கே பேரூரும் அமைந்துள்ளன.

இவ்வயலூரில் முருகன் சந்நிதி பிரசித்தமாயினும், சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஸ்தலம் இதுவாகும். ஈஸ்வரனுடைய பெயர் அக்னீஸ்வரர் என்பது. அம்பிகையின் திருநாமம் பூர்வஸ்திதிநாயகி என்பது.

வயலூர்க் கோயில், அமைப்பில் சிறியதுதான். எனினும் அழகில் சிறந்தது.

கோயிலுக்கு எதிரே மண்டபம் அமைந்துள்ளது. பக்கத்தில் அழகிய குளம் காணப்படுகிறது. இக்குளம் கருங்கற்களால் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுத் தெளிந்த நீரையுடையதாய் இருக்கிறது. குளத்தின் அருகே தேர்நிலை. தேர்நிலைக்குப் பக்கத்தில் பல வேல்கள் நடப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் பிரார்த்தனைக்காரர்களால் நடப்பட்டவை. நாள்தோறும் பிரார்த்தனை செலுத்துவதற்காக அன்பர்கள் வந்துபோவதைக் காணலாம்.

முதன்முதலில் தலைவாயிலில் நுழைந்ததும், ஒரு கிணறும், வன்னிமரமும் காட்சியளிக்கின்றன. அவற்றைத் தாண்டியதும், மற்றொரு வாயில் உள்ளது. அவ்வாயிலின் மேலே புதிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் குகஸ்ரீ கிருபானந்த வாரியார் அவர்களின் பெருமுயற்சியால் புதுப்பிக்கப்பட்டது. கோபுரவாயிலைத் தாண்டி உள்ளே சென்றதும் சிவபெருமானாகிய அக்னீஸ்வரர் சந்நிதியைக் காணலாம். பக்கத்தில் தென்முகம் நோக்கி முன்னிலை (பூர்வஸ்திதி) நாயகியாகிய அம்மன் சந்நிதி

அமைந்துள்ளது. அக்னீஸ்வரர் சந்நிதிக்கு நேர்பின்புறத்தில் ஆறுமுகக் கடவுள் வள்ளி தெய்வானை சமேதராக அமர்ந்திருக்கும் சந்நிதி உள்ளது. இவைகளைச்சுற்றி ஓர் உள் பிரகாரம் இருக்கிறது. இப்பிரகாரத்தில் தென்பக்கமாக, அருணகிரிநாதர் சந்நிதியும், விநாயகர் சந்நிதியும், முத்துக்குமாரசாமி சந்நிதியும், வடபக்கமாக மகாலக்ஷ்மி சந்நிதியும், சண்டிகேஸ்வரர் சந்நிதியும், நவக்கிரக சந்நிதியும் பொருந்தியுள்ளன. பிரகாரத்தைச் சுற்றி மதில் அமைந்துள்ளது. மதிலானது கிழமேலாகச் சுமார் முந்நூற்றிருபது அடி நீளமும், தென்வடலாகச் சுமார் எண்பத்தேழு அடி அகலமும் உள்ளது. மதிலைச் சுற்றியுள்ள வீதி தேரோடும் வீதியாகும்.

வயலூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அக்னீஸ்வரர் என்ற பெயர் மட்டுமின்றி, குமாரபூஜிதநாதர், ஆதிநாதர் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. அம்மனுக்கும், குமாரபூஜிதநாயகி, ஆதிநாயகி என்ற பெயர்கள் உள்ளன. முற்கால அரசர்களால் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்

டுக்கள் இக்கோயிலில் அமைந்துள்ளன. அக்கல்வெட்டுக்களில் சிவபெருமானுக்குப் பல பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவை யாவன ; விடங்கப்பெருமான், மகாதேவர், மறப்பிலி, திருக்களிற்றுப் பெருமானடிகள், என்னும் பெயர்கள் ஆகும்

குமரப் பெருமானுக்கு வயலூரன், முத்துக் குமாரசுவாமி, சுப்ரமண்யர், ஆதிவயலூரன், வயலூர்க் குமரன், வன்னிதலக் குமரன், ஆதிக்குமரன் முதலிய திருநாமங்கள் வழங்குகின்றன.

கோயிலின் முன்புறம் அமைந்துள்ள திருக்குளம் "சக்தி தீர்த்தம்" எனப் பெயர் கொண்டது. இது முருகவேளினுடைய சூலாயுதத்தினலே தோண்டப்பட்ட பெருமை வாய்ந்த தீர்த்தமாகும். மிகப் பெரியதாக இல்லாவிடினும் மிக்க அழகு வாய்ந்தது. சமீப காலத்தில் திருப்பணி செய்யப்பட்டு அழகிய படித்துறைகளுடன் கூடியது.

இக்குளத்தைத் தவிரக் கோயிலுக்குள்ளேயே ஓர் கிணறு இருக்கின்றது. இவ்



கோவிலும் — குளமும்

(சக்தி தீர்த்தம்)

விரண்டு தீர்த்தங்களைத் தவிர உய்யக்கொண்டான் என்னும் சர்ப்ப நதி கோவிலுக்குத் தெற்கே சிறிது தூரத்தில் கிழக்கு நோக்கி ஓடுகிறது. அதன் கரையில் அமைந்த சாலையின் வழியாகத்தான் வயலூருக்கு செல்ல வேண்டும். புண்ய தினங்களாகிய ஆடி அமாவாசை, ஆடிப் பதினெட்டு, தைப்பூசம், பங்குனி உத்திரம், அமாவாசை முதலிய நாட்களில் சுவாமி புறப்பட்டு வந்து இந்த ஆற்றில் தீர்த்தம் கொடுக்கும். இரண்டாம் பிரகாரத்தில் கீழைப் பிள்ளையார் கோயிலும், மேலைப் பிள்ளையார் கோயிலும், திருக்குளத்தின் அருகே தேரடியான் கோயிலும் சுற்றுக் கோயில்களாக அமைந்துள்ளன.

கிருத்திகை, சஷ்டி முதலிய விசேஷ தினங்களில் ஏராளமான மக்கள் யாத்திரையாக வந்து வழிபடுகின்றனர். இத்தலம் முருகன் சந்நிதியாலேயே பிரசித்திபெற்று விளங்குகின்றது.

புகழ்பெற்ற அடியாராகிய அருணகிரியாரின் திருப்புகழில் பலவிடங்களில் வயலூர்

சிறப்பிக்கப்படுகின்றது. இவ்வயலூரில் முருகக் கடவுள் இரண்டாவது தடவையாக அருணகிரியாருக்குத் தரிசனங்கொடுத்துப் பேரருள் புரிந்தான் என்பர். ஒரு தடவை அருணகிரிநாதர் விராலிமலை என்னும் ஸ்தலத்தில் இருந்தபோது வயலூர் முருகப்பெருமான் அவரை வாவென்றழைத்து அருள்புரிந்தனர் என்பதைத் திருப்புகழ்ப் பாடல்கள் நன்கு விளக்குகின்றன. திருப்புகழ் பாடும் வன்மையை அருணகிரியாருக்கு முருகன் அருளிய ஸ்தலம் இவ்வயலூர்.

அருணகிரியார் பழனியம்பதியிலே சென்று திருப்புகழ் பாடும்போது, முருகன் தன்னை வயலூரில் தடுத்தாட்கொண்ட செய்தி நினைவுக்கு வந்தது. உடனே அவ்வூர்த் திருப்புகழில்,

"செய்ப்பதிக்குள் எனைத்தடுத்
தடிமைப்படுத்த அருள் பெருமானே"

என்று பாடுகிறார். திருப்புக்கொளியூர் என்ற ஊரில் பாடும்போது,

"வெளிப்பட் டெனையாள்
வயலூரி லிருந்த வாழ்வே"



சர்ப்ப நதி (திருமஞ்சனப் படித்துறை)

என இசைக்கின்றார். வயலூராகிய இந்த ஸ்தலத்திற்கு வந்து பாடும்போது,

“ விராலி மாமலையில் நிற்ப
நீ கருதி யுற்று வாவென வழைத்தென்
மனமாசினை யறுத்து ஞானமு தளித்த
வாரமினி நித்தம் மறவேனே ”

என்று உருகிப் பாடுகிறார்.

குமரப்பெருமான் தன்னை எப்போதும் திருப்புகழ் பாடிக்கொண்டிருக்குமாறு கட்டளையிட்டான் என்பதை,

“ ஓதுகின்ற திருப்புகழ்
நித்தம் பாடும் அன்பது
செய்ப்பதியில் தந்தவ நீயே ”

என்று முழங்குகின்றனர் ஆவினன்குடியில். மேலும் துதிப்பாடலில்,

“ உயர் திருப் புகழ் விருப்பமொடு செப்பென
எனக்கு அருள்கை மறவேனே ”

என்று பாடுகிறார். இவைகளிலிருந்து முருகப்பெருமான் அருணகிரியாருக்கு அருள் புரிந்த விதம் நன்கு புலப்படுகின்றது. இவ்வாறு ஆண்டவனின் அருள்பெற்ற அருண

கிரியாருக்கு வயலூர்க் கோயிலில் திருவுருவம் அமைத்துப் பிரதிஷ்டை செய்திருக்கின்றார்கள்.

முருகன் தனக்கு அருள் செய்ததாகக் குறிப்பிடும் செய்திகளைத் தவிர, வயலூர்க் குமரனைப் பற்றிப் பொதுவாகப் பல திருப்புகழ்களில் பாடியுள்ளார் அருணகிரியார். அவற்றின் அடிகளிற் சில பின்வருமாறு :

"சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலையுடை சுற்று வயலூரா"
—(திருப்புகழ்)

"மடல்சீற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே"
—(திருப்புகழ்)

"சக்ர தரஅரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்பமுள தட வயலூர் இயலூர் பெருமாளே"
—(திருப்புகழ்)

"பஞ்சரங் கொஞ்சுங் கிளிவந் துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா"
—(திருப்புகழ்)

இத்தகைய திருப்புகழ்கள் செவிக்கும் உள்ளத்திற்கும் அமுதாக உயிரைத் தளிர்க்க வைப்பனவென்றால் மிகையாகாது.



ஸ்ரீ முருகன் கோவில் விமானம்

வயலூர்க் கோயிலில் நாள்தோறும் நான்கு காலங்களில் பூஜை நடக்கின்றது. அவை: காலை, உச்சிவேளை, மாலை, இரவு நேரங்களாகும். இவ்வேளைகளில் அபிஷேகங்களும், ஆராதனைகளும் நடைபெறுகின்றன. விசேஷ தினங்களில் மகா அபிஷேகங்களும், அர்ச்சனைகளும் சிறப்புடன் நடக்கும்.

ஒவ்வொரு வருஷமும் இத்தலத்தில் வைகாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம் நடைபெறுகின்றது. வைகாசி-ஸ்ரீ விசாக நட்சத்திரத்தில் அடியார்கள் பால்காவடி எடுத்துக்கொண்டு ஊர்வலமாக வந்து குமரப் பெருமானுக்கு அபிஷேகமும், ஆராதனையும் செய்து அண்ணலின் அருளைப் பெறுகின்றனர்.

ஆனி மாதம் மூலத் திருநட்சத்திரத்தில் அருணகிரிநாதர் உற்சவம் நடக்கும். நவராத்திரி உற்சவம் புரட்டாசியிலும், ஐப்பசியில் கந்தர்சஷ்டி உற்சவமும், கார்த்திகை மாதத்தில் தீப உற்சவமும், மார்கழியில் திருவாதிரை உற்சவமும் நடைபெறுகின்

றன. தை அமாவாசை தினத்திலும், மாசி மாதம் கார்த்திகைத் திருநாளிலும், பங்குனி உத்திர தினத்திலும் சிறப்பாக மகா அபி ஷேகங்கள் நடைபெறுகின்றன. சுவாமி உய்யக்கொண்டான் நதிக்குப் புறப்பட்டு வந்து தீர்த்தம் கொடுக்கும் நாட்கள், தைப் பூசம், பங்குனி உத்திரம், ஆடி அமாவாசை முதலிய நாட்கள் ஆகும்.

வயலூர்த் தலத்தை வழிபட்டு நன்மை யடைந்தவர்கள், திருமால், பிரம்மா, தேவேந்திரன் முதலான தேவர்களும்; லட் சுமி, கலைவாணி, இந்திராணி, முதலிய தேவி மார்களும்; சூரியன், சந்திரன், அக்னி முத லிய சுடர்களும் ஆவர்.

வயலூரின் அமைப்பையும், சிறப்பையும் கண்டோம். கலியுக வரதனுன கந்தன் வற் ருத அருள் வாரிதியாக வீற்றிருக்கும் தன் மையேயன்றி, சிவபெருமானும் மகிழ்ந்து வசிக்கும் சிவஸ்தலமாக இவ்வூர் விளங்கு கின்றது என்பதையும், அருணகிரியாருக்குக் காட்சி கொடுத்து அருள்புரிந்து, திருப்புகழ் பாடுமாறு பணித்த பெருமையையும்

கொண்ட ஆதிவயலூரரை அவசியம் சென்று வணங்குதல் மக்கள் கடமையென்பதை வற்புறுத்தத் தேவையில்லை.

## 3. தமிழரசரும்—வயலூரும்

முன் காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர்கள், போர் முதலிய அரசியல் காரியங்கள் ஓய்ந்த காலங்களில் மத சம்பந்தமான விஷயங்களில் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்களுடைய முயற்சிகளின் பயன்தான், தமிழகத்தில் கணக்கற்ற கோயில்களும், மடங்களும், மக்களுக்கு அருள்நிலயங்களாகக் காட்சியளிக்கின்றன சைவமும், வைணவமும், தமிழும் தழைத்துப் பெருகியதற்கு அவர்களின் ஆதரவே காரணமாகும். முதலாம் இராஜராஜன், கங்கைகொண்ட சோழன் முதலியோர் புகழ் உலகம் உள்ளளவும் நின்று நிலவுவதற்கு காரணம் அவர்கள் அமைத்த அழியாப் புகழ்பெற்ற ஆலயங்களும், அவ்வாலயங்களுக்குக் கொடுத்த ஏராளமான செல்வங்களும் ஆகும்.

இம்முறையில் வயலூர்க் கோயிலும் சோழ அரசர்களின் பேருதவியைப் பெற்றுள்ளது என்பதற்கு அக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் உதாரணங்களாகும். இங்குள்ள கல்வெட்டுக்கள் சோழ அரசர்களாலேயே வெட்டப்பட்டுள்ளன. ஆதியில் சோழரின் தலைநகராக உறையூர் விளங்கியது என்பதை நாம் அறிவோம். எனவே சோழ நாட்டுத் தலைநகரின் அருகாமையில் அமைந்துள்ள வயலூர், சோழர்களின் திருத்தொண்டிற்கு இலக்கானதில் ஆச்சரியமொன்றும் இல்லை.

அவர்கள் காலத்தில் வயலூரானது, கேரளாந்தக வளநாடு என்ற பிரிவில், உறையூர்க் கூற்றத்து வயலூர் என வழங்கப்பட்டது. மேலும், தென்கரைப் பிரமதேயம் நந்திவர்மமங்கலம் என்றும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது அக்னீஸ்வரம் என்னும் இந்த ஸ்தலத்தின் சிவபெருமானைத் திருக்கற்றளிப் பெருமானடிகள் என்றும், இன்னும் முன்கூறிய பெயர்களாலும் கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. பூர்த்தியடையாத கல் வெட்டுக்களும் உள்ளன. எல்லாக் கல்

வெட்டுக்களும் அரசாங்கத்தாரால் நகல் எடுக்கப்பட்டுள்ளன. இக் கல் வெட்டுக்களிலிருந்து, முதலாம் இராஜராஜசோழன், இராஜேந்திர சோழதேவன், குலோத்துங்க சோழதேவன், இராஜகேசரி வர்மன், மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன் முதலிய அரசர்கள் இக்கோயிலுக்கு நிலம், பொன் முதலியன கொடுத்ததாக அறியலாம்.

முதலாம் இராஜராஜன் கி.பி. 985ல் தஞ்சாவூரில் இருந்து அரசாண்டவன். அவனே தஞ்சையில் புகழ்பெற்ற பிருஹதீசுவரர் ஆலயத்தைக் கட்டினான். இம்மன்னனது திருக்குமாரனே இராஜேந்திர சோழதேவன் என்பவன். இவனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவ்வரசன் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கிராமமாகிய கங்கைகொண்ட சோழபுரம் என்ற புதிய நகரை உண்டாக்கி, அதனையே தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். இவனுடைய கலைச்செல்வமாக அவ்வூரில் திகழும் கங்கைகொண்ட சோழீச்சுரத்தை இன்னும் காணலாம்.

இவ்வரசர்கள் ஈந்தருளிய நிலம் முதலி யவை, கோயில் பூஜை, நந்தவனம் திருத்து தல், நந்தாவிளக்கு எரித்தல், மாலை தொடுத் தல், திருப்பதிகம் (தேவாரம்) பாடுதல், திருவமுது, நெய், கறியமுது, தயிரன்னம், அடைக்காய் (வெற்றிலை) அமுது முதலிய வற்றிற்கும், தேன், பால், பழம், சர்க்கரை முதலிய பொருள்களுக்காகவும் இறையிலி தேவதானமாக (வரியில்லாமல் கோயிலுக் குத் தானமாக)க் கொடுக்கப்பட்டன.

இவ்விஷயங்களைக் கூறும் கல்வெட்டுக் களிலிருந்து சில பகுதிகளைப் பாருங்கள் :—

1. "கோ இராஜகேசரி வர்மனுக்கு ஆண்டு மூன்றில் உறையூர்க் கூற்றத்து வயலூர் விடங்கப் பெருமானுக்கு ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது".

கல் வெட்டுக்களில் வரும் ஆண்டுகள் அவ்வரசன் ஆட்சிக்கு வந்த வருஷங்களைக் குறிக்கும். எனவே "கோவிராஜகேசரி வர் மனுக்கு ஆண்டு மூன்று" என்பது அவன் பட்டத்துக்கு வந்த மூன்ருவது ஆண்டில் என்று பொருள்.

2. " திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை நிகழ்தர ஈழ
......ண்டிரை வெற்றித் தண்டாற் கொண்டு
தந்தெழில் ......பதகம் விளங்கும்
யாண்டே செழியரைத் தேசுகொள்
கோ இராஜகேசரி வர்மன் "

இவ்வரிகள் முதலாம் இராஜராஜனுக்குக் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருக்கும் 'மெய்க்கீர்த்தி'யாகும்.

இலக்குமியும் பூமிதேவியும் தனக்கு வசப் பட்டிருக்கும் தன்மையை உணர்த்தும் வகையில், காந்தளூர் என்னும் கடற்கரைச் சாலையில் இருந்த கப்பல்களை முறியடித் தான். வேங்கை நாடு முதல் கொல்லம், கலிங்கம் வரையில் எல்லா நாடுகளையும் வென்று அடிமைப் படுத்தினன். பாண்டி யரையும் வெற்றி கொண்டான்.

இத்தகைய வீரச் சிறப்புக்களையுடைய இராஜராஜன் தன்னுடைய ஆட்சி ஆண்டு

பதின்மூன்றில் வயலூர்ப் பெருமானுக்கு நிலம் விற்றுக் கொடுத்த செய்தி காணப் படுகிறது.

3 ஊரார் கால்செய் நிலங்கொண்டு விளக்கெரிக்க ஏழுநாழி (7 படி) நெய் கொடுத்தது. "இவ்விளக்கு ரக்ஷித்தார் பாததூளி என் தலைமேலன"

4 இராஜராஜனுடைய ஆட்சியாண்டு இருபத்தி நான்கில், "கேரளாந்தக வள நாட்டு உறையூர்க் கூற்றத்து" வயலூரில் திருப்பதியம் பாடுபவர்களுக்காக ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது.

5. மேலும் அவ்வரசனுடைய ஆட்சி ஆண்டு பதினொன்றில் பொன்கொண்டு நிசதம் (நாள்தோறும்) இருநாழி நெல் செலுத்த இருவர் ஒப்புக்கொண்டது.

6. கோவிராஜகேசரி வர்மனுடைய ஆட்சியாண்டு ஏழில் நந்தவனம் திருத்தியமைப் பார்க்கும், மலர்பறித்து மாலை தொடுப் பார்க்கும் ஊரார் நிலம் இறைநீக்கி (வரி நீக்கி)த் தேவதானமாக (கடவுளுக்குத் தானமாக) நிவந்தஞ் செய்து கொடுத்தது.

7. அதே வருஷத்தில் ஊரார் இறை நீக்கித்தேவதானமாக நிலம் நிவந்தம்செய்து கொடுத்தது.

8. கோவிராஜகேசரி வர்மனின் அதே ஆட்சி வருஷத்தில் கோயிலில் இரவும் பகலும் ஓர் நந்தாவிளக்கு எரிக்க ஊரார் இறை நீக்கித் தேவதானமாக நிலம் கொடுத்தது.

9 "கோவிராஜகேசரி வர்மனுடைய ஆட்சியாண்டு இருபத்தொன்றில் கோட்டத்து வயலூர் மகாதேவர்க்கு இரவும் பகலும் ஓர் நந்தா விளக்கெரிக்க ஊரார் இரண்டு செய் நிலம் கொண்டது"

10. "குலோத்துங்க சோழ தேவனுடைய காலத்தில் கற்றளித்திரு அக்னீஸ்வரமுடைய மகாதேவர்க்கு விளக்கெரிக்க நிலம் நிவந்தம் செய்து தேவதானமாகக் கொடுத்தது.

11. அவ்வரசனின் ஆட்சியாண்டு ஏழில் உறையூர்க் கூற்றத்து வயலூர் திருக்கற்றளிப் பெருமான் அடிகளுக்குத் தேவதானமாக நிலம் கொடுத்தது.

12. மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மனுடைய ஆட்சி நாற்பத்தொன்றாவது ஆண்டில் தென்கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலத்தில் திருப்பதியம் பாட, சந்திரசேகரன் அரமையிந்தனேன் என்பவன் நீருடன் அட்டிக்கொடுத்தது.

13. கோப்பரகேசரி வர்மன் இராஜேந்திர சோழ தேவனுடைய நான்காவது ஆட்சி ஆண்டில் திருக்கற்றளிப் பெருமாணடிகளுக்குச் சாத்துவதற்குப் பொற்பூ அளித்தது.

14. இராஜேந்திர சோழ தேவனின் பதினைந்தாவது ஆட்சி ஆண்டில் உறையூர்க் கூற்றத்து வயலூர்ப் பிராட்டியாருக்கு நிசதம் (நாள்தோறும்) திருவமுது, நெய், கறியமுது, தயிர், அடைக்காய் இவைகட்காக நெல் கொடுத்தது.

15. அவ்வரசன் காலத்திலேயே, பால், தேன், நெய், தயிர், திருவிளக்கு, பழம், சர்க்கரை இவற்றிக்காக ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது



சன்னதி விமானம்

16. மேலும் அவ்வரசன் காலத்திலே வயலூர்ப் பெருமானுக்கு இரவும் பகலும் ஓர் நந்தா விளக்கெரிக்க ஊரார் ஏழு கழஞ் சரைப் பொன்கொண்டு நிலம் தேவதான மாகக் கொடுத்தது.

17. குலோத்துங்க சோழ தேவனின் ஆட்சி ஏழில் திருக்கற்றளிப் பெருமானடி கட்கு ஊரார் நிலம் தேவதானமாக நிவந் தம் செய்து கொடுத்தது.

18. திரிபுவனச் சக்ரவர்த்திகளாகிய குலோத்துங்க சோழ தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டில் கோயிலுக்கு நிலம் சர்வ மானியம் செய்தது.

19. கோவிராஜகேசரி வர்மனின் ஆட்சி ஆண்டு ஆறில் ஊரார் வயலூர்ப் பெருமா னுக்கு நிலம் இறையிலியாக விற்றுக் கொடுத்தது.

20. மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மனின் ஏழாவது ஆண்டில் வயலூர் உடையார் மறப்பிலிக்கு (சிவபெருமா னுக்கு) ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது.

இக்குறிப்புக்களைக் கொண்ட கல்வெட்டுக்கள் 1936வது ஆண்டில் 138ம் எண்ணிக்கை முதல் 157ம் எண் வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களின் மூலம் இடைக்காலமாகிய கி. பி. 10, 11, 12ம் நூற்றுண்டுகளில் சோழப் பேரரசர்கள் வயலூர்க் கோயிலுக்காகச் செய்த பேரறங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுகிறோம்.

## 4. நிர்வாகம்

ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தொன்பதாம் ஆண்டில் குமாரவயலூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் நிர்வாகம் இந்துமத தர்ம பரிபாலன போர்டார் ஆளுகைக்கு கொண்டு வரப்பட்டது. நிர்வாக அதிகாரி Paid Executive Officer கண்காணிப்பில் இக்கோவில் இருந்து வருகிறது. நிர்வாக அதிகாரிக்குகீழ் பேஷ்கார் போன்ற பல சிப்பந்திகளும் உண்டு. நிர்வாக முறையை சரியான முறையில் நடத்திவர 3 தர்மகர்த்தாக்கள் கொண்ட ஒரு போர்டு உண்டு. தற்போது ஸ்ரீ பூர்ண தேவர் (1),



த்வஜஸ்தம்பம் ஸ்ரீ அக்னீஸ்வரர் சன்னதி

ஸ்ரீ S. M. தில்லைநாயகம் பிள்ளை (2) ஆகிய இருவர்கள் கௌரவ தர்ம கர்த்தாக்களாக (Honourary Trustees) இருந்து வரு கிறார்கள்.

வருஷந்தோறும் சுமார் பத்தாயிரத்துக்கு மேல் தேவஸ்தானத்துக்கு வரும்படி வரக் கூடிய வகையில் நஞ்செய் புன்செய் நிலங் கள், தென்னந் தோப்புகள், காலி மனைகள், வீடுகள் இருக்கின்றன.

சுமார் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்கள் வயலூர் கோவிலின் உடைமை களாக உள்ளன. அவையாவன; கல் இழைத்த பதக்கங்கள், திருமாங்கல்யம், வைர வேல், கல் இழைத்த கிரீடம் ஒன்று சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஸ்ரீ சுப்பிர மணிய சுவாமிக்கு ஆயிரத்து தொளாயி ரத்து ஐம்பத்து இரண்டாம் ஆண்டு செப் டம்பர் மாதம் 24ம் தேதி புதன்கிழமை சஷ்டி தினத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகா கூடப்பள்ளி மிட்டா தாரணி ஸ்ரீமதி செல்லமணி அம்மாள் அவர்

களால் ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை களுடன் சாத்துபடி செய்யப்பட்டது.

சென்னை குகஸ்ரீ கிருபாநந்தவாரி அவர்கள் பெருமுயற்சியால் சுமார் இரண்டாயிர ரூபாய் மதிப்புள்ள வைர ரெத்தினவேல் ஒன்று புதிதாக செய்யப்பட்டு 1940ம் வருடம் அக்டோபர் மாதம் 6ம் தேதியன்று திருச்சிராப்பள்ளியில் இருந்து பவனியாக கொண்டு வரப்பட்டு முருகனுக்கு சாத்தப் பட்டது.

பிரதோஷ காலங்களில் விசேஷக் கட்டளைகள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிரம்மோத்ஸவம் முதலிய விசேஷ நாட்களில் சுவாமி வெளியே பவனியாக வருவதற்கு பல வாகனங்கள் அமைந்துள்ளன. அவையாவன: மர வாகனங்களாகிய காளை, அன்னம், மயில், யானை, ஆதிசேஷன் நந்தி, குதிரை முதலியனவும் தேரும், சூரன் சிலையும் உள்ளன.

முருகன் சன்னதிக்கெதிரிலே கண்ணாடி சேவைக்காக அழகிய நிலைக் கண்ணாடி



ஸ்ரீ நடராஜர் — உத்ஸவமூர்த்தி
(சுந்தரத்தாண்டவம்)

ஒன்று 1937-ம் ஆண்டில் நிருவப்பட்டுள் ளது. அருணகிரிநாதர் சன்னதியில் வெண் கலபாவை விளக்கொன்று அமைக்கப்பட் டுள்ளது.

கோவிலுக்குள் சன்னதிகள் எல்லாம் அழகாக அமைந்துள்ளன. அக்கினீஸ்பரர் சன்னதியிலுள்ள நடராஜரின் இரண்டு பாதங்களும் ஊன்றிய நிலையில் காணப் படுகின்றன. திருவாசிகை இல்லை.

கோவிலின் முன் கோபுரம் ராஜகோபுர மாக ஐந்து கலசங்களுடனும் ஐந்து மாடி களுடனும் பொலிகின்றது. இக்கோபுரம் சமீபகாலத்தில் சென்னை திருப்புகழ் அமுர் தம் ஆசிரியர் குகஸ்ரீ கிருபானந்தவாரியார் அவர்களின் பெருமுயற்சியால் வசூலான தொகை சுமார் ரூபாய் முப்பதுனாயிரம் செலவிட்டு ராஜகோபுரம் புதிப்பிக்கப்பட் டது.

பிரகாரத்தின் பின்பக்கத்தில் உள்ள அருணகிரிநாதரின் திருஉருவமும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டதேயாகும்.

சக்தி தீர்த்தமாகிய திருக்குளம் செப்ப னிடப்பட்டு சுற்றிலும் சுவர் எழுப்பியும் படித்துறைகளை அழகாக நிருவியும் அழகு படுத்தப்பட்டது. இன்னும் சில்லரை திருப்பணிகளும் செய்யப்பட்டு 1937-ம்வரு டம் திருப்பணிகள் பூர்த்தியாகி குகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களால் மகாகும்பாபி ஷேகமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

குமாரவயலூர் என்னும் ஸ்தலம் முருகன் சன்னதியால் பிரகாசித்து விளங்குகிறது. வேண்டுதல்காரர்கள் இக்கோவிலுக்குவந்து தங்கள் இஷ்டப்பிராப்தி அடைவதும் திரு மணம் முதலானவைகள் நடத்துவதும் இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது. கோவிலின் முன்புறமுள்ள குளம், தேர்நிலை அதை ஒட்டிய தேரடியான் கோவிலும் இயற்கை கரு ஊனங்களாக காணப்படு கின்றன. முருகப்பிரானின் திருவருளைப் பெற்று, திருப்புகழ் முதலியவற்றைப்பாடி அருளிய அருணகிரிநாதர் தனது திருப்புக ழில் வயலூர் முருகனைப்பற்றிப் பலவிடங் களில் குறிப்பிட்டுள்ளார் என்பதை முன் னரே கூறினோம். இவ்வடியார் திருவருளை



ஆதிவயலூர் — ராஜகோபுரத்தின் தோற்றம்

யில் தங்கியிருக்கும்போது 'வயலூர்க்கு வா' என முருகன் அழைத்துக் கிருபைசெய் தான் என்பதையும், 'நீ திருப்புகழ் பாடுக' என்று அன்புக் கட்டளையிட்டான் என் பதையும் அருணகிரியார் வாய்மொழி யாகவே காண்கிறோம். இவர் வயலூரில் வந்து குமரவேள்மீது பாடிய திருப்புகழ் களைத்தவிர, திருச்சிராப்பள்ளி, நாககிரி, விராலிமலை, திருவானைக்கா, திருச்சங்கோடு, திருவாவினன்குடி, திருப்புக்கொளியூர், பேரூர், திருப்பரங்குன்றம் முதலிய ஸ்தலங் களிலும் வயலூரை வைத்துப் பாடி யுள்ளார்.

## 5. தோத்திரங்கள்

அருணகிரிநாதர் வயலூர்ப்பதிமீது பாடி யுள்ள திருப்புகழ் பாடல்கள் :—

1. என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும்
 என்னால் துதிக்கவும் கண்களாலே
 என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
 என்னால் லிருக்கவும் பெண்டிர்வீடு
 என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
 என்னால் சலிக்கவும் தொந்தநோயை

என்னு லெரிக்கவும் என்னுல் நினைக்கவும்
என்னுல் தரிக்கவும் இங்குளுனா்

கன்னு ருரித்தவென் மன்னு எனக்குநல்
கர்ணு மிர்தப்பதம் தந்தகோவே

கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ
கண்ணு டியிற்றடம் கண்டவேலா

மன்னன தக்கனே முன்னுள் முடித்தலை
வன்வா ளியிற்கொளும் தங்கரூபன்

மன்னு குறத்தியின் மன்னு வயற்பதி
மன்னு மூவர்க்கொரு தம்பிரானே

உ. தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பில் அடியேனைத்

தாதவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்திய விராலி

மாமலையி னிற்ப நீகருதி யுகந்து
வாவென வழைத்தென் மனதாசை

மாசினை யறுத்து ஞானமு தளித்த
வாரமினி நித்த மறவேனே

காமனை யெரித்த தீநயன நெற்றி
காதிய சுவர்க்க நதிவேணி

காளிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அய்யர் குருநாதர்

சோமனெ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த பெருமாளே

3 கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுவரிதழ் எழிலாகும்
கரிபோற் கிரிமுலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியணை எனவாகும்
உடல்காட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கொருவித நடையாலும்
ஒருநாட் பிரிவதும் அரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ
குடலீர்த் தசுரர்கள் உடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப்பல அலகைகள் பேய்கள்
கொலையோர் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக உயிர்தாழை
மடல்சீற் றினிலெழு வ்ரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனில் உறைவோனே
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே.

அருணகிரிநாதர் இயற்றிய மற்றொரு நூலாகிய கந்தரலங்காரம் என்பதிலிருந்து சில பாடல்கள் :

1. பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி
னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந்
தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே.

2. நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

3. விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி

வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

கந்தர் அனுபூதி என்னும் நூலிலிருந்து சில பாடல்கள் :

1. ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

2. திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே.

3. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே

4. உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

கந்தபுராணத்திலிருந்து சில துதிகள் :

1. மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள்கள் போற்றி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

2. அருவமும் உருவு மாகி
யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய.

நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் துதிக்கும் பகுதி :

அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை

மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செறுவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே.
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசைபே ராளா
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்......

திருமுருகாற்றுப்படையின் பிற்பகுதியி லமைந்த வெண்பாக்கள் :

1. குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்

இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத் துறை.

2. குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவம்-இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற்காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

3. வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவேல் உண்டே துணை.

4. இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற்சூர்தடிந்தகொற்றவா-முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

5. உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—
பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

6. அஞ்சு முகந்தோன்றின் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—
—நெஞ்சில்

ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

7 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால்
எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

8 காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

9. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையாய் நெஞ்சே அணிமுருகாற்றுப்படையைப்
பூசையாய்க் கொண்டே புகல்.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்படையைத்
தற்கோல நாள்தோறுஞ் சாற்றினல்-முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த எல்லாந் தரும்.

இந்நூலாசிரியராகிய வித்வான் வி துரைசாமி அவர்கள் வயலூரைத் தரிசிக்கச் சென்றகாலையில் பாடிய பாடல்கள் :

1. தென்னைப் பொழிலுங் கழனியுஞ்
சூழ்ந்த திருவயலூர்
மன்னைப் பரமனை மாணிக்க
வேலனை மங்கைவள்ளி
தன்னைக் கலந்த குமரனைக்
கண்டென் தளையறுத்தேன்
என்னைக் கெடுக்கும் இடர்களெல்
லாம்சென் றிரிந்தனவே.

2. பாலும் பழமும் பருகிப்
பருகிப் பருத்து நிற்கும்
தோலும் சடையுஞ் சதமென்
றிருந்தேன் துணைவியரும்
வேலும் மயிலும் விளங்கிட
வந்து வினையறுத்தான்
மாலும் அயனுமாய் மன்னும்
குகனென் மனத்தகத்தே.

3. வயலூரா என்றே வழங்கிடுமின் காவல்
அயலேதும் இல்லை யறிவீர் !—புயலோடும்
குன்றம் பிளந்தெறிந்த கொற்றவேல்
துன்றம் பிளக்கும் குடைந்து. [மாதுயராம்

அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளையவர்கள்
இயற்றிய ஆதிவயலூர் வெண்பா அந்தாதி

என்னும் நூலிலிருந்து சில பாடல்கள் :

1. எண்ணுமுகம் ஆறுடையாய் இன்காமுந்
நாலுடையாய்
கண்ணுவய லூர்முருகா காயடியேன்—
மண்ணுலகில்
வாழ்வுமதி யும்வளமும் வாய்க்கப்பெற்
றெத்தகைய
தாழ்வுமுறு தோங்கவருள் தா.

2. காண்பானுங் காட்சியும் காணப் படுபொருளும்
மாண்பான நீயாம் வணமுணர்ந்தேன்—
சேண்டேடும்
ஆறு முகனே அணிவயலூர்க் கோனேஉன்
ஆறு முகமெற் கருள்

3. பண்கனிந்த நக்கீரர் பாட்டேற்ற நின்செவிகள்
எண்கனிந்த என்புன்சொல் ஏற்றிடுமோ—
விண்கனிந்து
பாடுபுகழ்ப் பண்வயலூர்ப் பண்டிதனே
வேல்முருகா
தேடுமெனக் கீவாய் திரு.

தோத்திரங்கள் தான் கவலையுற்ற உள்ளத்திற்கு அமிர்தமாகும் தன்மையுடையன என்பது ஆன்றோர்களின் துணிபு ஆதலின்

இவைபோன்ற தோத்திரங்களைப் பயின்று நலம் பெறுவது நமது கடமையாகும்.

உலகிலேயே ஆன்ம உணர்ச்சியில் மேம் பட்ட தமிழகம் அருட்செல்வத்தை வாரி வழங்கும் கோயில்களை மிகுதியாக உடை யது. சைவ, வைணவ மதங்கள் மேன் மேலும் செழித்து வளரவும், கடவுள் வழி பாடு ஓங்கவும் கோயில்கள் காரணமாக வுள்ளன. பேரரசர்களும், வள்ளல்களும் எல்லையற்ற பொருள்களைக் கொட்டி, அழி யாத கோயில்களை அமைத்தனர் அவை கள் அருட்செல்வம் மட்டுமின்றிக் கலைச் செல்வங்களையும் தம்மகத்தே கொண்டு உல கிற்கே புகழ் ஒளியை வீசி விளங்குகின்றன.

இத்தகைய கோயில்களுக்குச் சென்று இறைவனை வணங்குவதன் மூலம் எல்லா நன்மைகளையும் பெற்று மானிடப் பிறவி யெடுத்ததன் பயனை நுகர்ந்து மறுமையில் வீட்டுலகத்தை (மோட்சத்தை) யடைய முயல்வோமாக.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்

கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்

வேலுமயிலுந் துணை.

வாசன்

அச்சகம்,

திருச்சி.